யோகாஸன ஆலய விஜயம்

மலர் 31	காளயுக்தி ஆண்டு ஆடித் திங்கள் July—1978	இதழ் 7

ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் பராபரம்
ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் சிவகதி
ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் உணர்வினை
ஒன்றிநின் றேபல வூழிகண் டேனன்றே

திருவருள் நினைவால் உள்ளம் ஒருமுகப்பட்டேன். அதனால் பராபரமாகிய செம்பொருளாம் சிவகதியும் உணர்ந்தேன்; திருவடி யுணர்வையும் உணர்ந்தேன். அதேபோல பல யுகங்களையும் கண்டுணர்ந்தேன்.

—திருமூலர்

சந்தா விபரம்	உள்நாடு	சிலோன்	வெளிநாடு (கப்பல்)	விமானம்
ஆண்டு சந்தா	ரூ. 4—00	ரூ. 6—00	ரூ 15—00	ரூ. 30—00
ஆயுள் சந்தா	ரூ. 50—00	ரூ. 80—00	ரூ. 150—00	ரூ. 300—00
தனிப்பிரதி	40 காசு	50 காசு	ரூ. 1—25	ரூ. 2—00

பொன் மொழிகள்

பரமனிடம் தாங்களே பிரார்த்தனை பண்ணிக்கொள்ளுங்கள். அவர் எல்லார்க்கும் சொந்தம்! சந்தமாமா குழந்தைகள் எல்லார்க்கும் சொந்தமாயிருப்பது போன்று இறைவன் எல்லார்க்கும் சொந்தமாயிருக்கிறார்.

இராமகிருஷ்ண பரமஹம்சர்.

இந்தப் பரந்த உலகத்தில் யாதொரு உதவியும் ஆதாரவும் இல்லாமல் திக்குத்திசை தெரியாது தவிக்கும் இருள் மண்டிய நேரத்திலும் அவருடைய திருநாமத்தின் சக்தி நமக்குத் தெம்பு கொடுக்கிறது. நம் சந்தேகங்களையும் நிர்க்கதியான நிலையையும் தூரத் துரத்திவிடுகிறது.

மகாத்மா காந்தியடிகள்.

உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் பொன்மொழி

அருள் நிலையை நாடிச் செல்பவரின் பக்குவமறிந்து இறைவன் தானே அறிவில்நின்று குருவாய் உணர்த்துகின்றார்.

—திருமதி சாவித்திரி செல்வராஜன்.

பௌர்ணமி வகுப்பு

18—8—78 வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு, சென்னை வண்ணையம்பதி திருவொற்றியூர் நெடுஞ்சாலை, 194, நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில் பௌர்ணமி வகுப்பு நடைபெறும். யாவரும் கலந்துகொண்டு பயன்பெறுக.

வேள்விப் பயிற்சி வகுப்பு

யோகாசன ஆலயம் எண் 7 வன்னியர் முதல் தெரு, சூளைமேடு சென்னை 94-ல், 13—8—78 அன்றும், செங்கல்பட்டு, பெரியநத்தம், பெரிய ரத்தினத் தெரு எண் 3, இல்லத்தில் 20—8—78 அன்றும் காலை 10 மணிக்கு வேள்விப் பயிற்சி நடைபெறும். யாவரும் கலந்து பயிற்சி பெறுக!

ஆத்மயோகம்—22

15—8—78 செவ்வாய் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் அருளுரை வழங்குகின்றார்கள், வேள்வி, பஜனை, யோகாசனங்கள், தியானம் ஆகிய நிகழ்ச்சிகள் உண்டு.

இடம்: ஹிந்து ஆபீஸ் தொழிலாளர் சங்கம்
(திருமண மண்டபம்)
13, புதிய பங்களா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
இறங்குமிடம்: சிந்தாதிரிப்பேட்டை மாநகராட்சி மருத்துவமனை.

மகரிஷி தாயுமானவர்

ஆசையெனும்

திரு. கோ. மு. சுவாமி அவர்கள்

நிகழ்த்திய உரை விளக்கம்.

'சாட்டையிற் பம்பர சாலம்போ' லெலாம்
ஆட்டுவா னிறையென வறிந்து, நெஞ்சமே!
தேட்டமொன் றறவருட் செயலி னிற்றியேல்
வீட்டறந் துறவற மிரண்டு மேன்மையே.

பதவுரை

(இ-ள்.) நெஞ்சமே! - மனமே!, சாட்டையின் - கயிற்றினு லாட்டப்படுகிற, பம்பர சாலம்போல் - பம்பரக் கூட்டங்கள்போல, எல்லாம் - எல்லா உயிர்களையும், இறை - முதல்வன், ஆட்டுவான் என - ஆட்டுவிப்பானென்று, அறிந்து - தெரிந்து, தேட்டம் ஒன்று அற - கவலையொன்றுமில்லாது, அருள்செயலில் - திருவருட் செய்கைக்குட்பட்டு, நிற்றியேல் - நிற்பையாகில், வீட்டு அறம் இல்லறம், துறவு அறம் - துறவறம், இரண்டும் – ஆகிய இரண்டறங்களும், மேன்மையே - மேன்மையை யுடையனவே, என்க.

கருத்துரை

மனமே! கயிற்றினுல் ஆட்டப்படுகின்ற பம்பரக் கூட்டங்கள்போல, எல்லா உயிர்களையும் சூட்சுமக் கயிற்றைக்கொண்டு முதல்வனுகிய பரம்பொருள் ஆட்டுவிப்பான் என்று அறிந்து கவலையொன்றுங் கொள்ளாமல், திருவருட் செயலுக்குட்பட்டு நிற்பாயாக! நின்ருல், இல்லறம் துறவறமாகிய இரண்டும் மேன்மையுடையனவேயாம்.

விரிவுரை

முன் பாடலில் சுவாமிகள், யாசிப்பவன் ஈகையாளனின் அருள் நாடியிருப்பதுபோல, பரம்பொருளினிடத்தில் சகச நிட்டை வேண்டி நின்ருர். இப்பாடலில் இறையருளை நாடிநின்று, இல்லறம் துறவறம்

இரண்டினிலும் சமரசத்தைக் காண்கின்ருர். மகரிஷி தாயுமான அடிகளாரை சமரச ஞானி எனவும், சமரச சன்மார்க்கி எனவும் போற்றப்படுவதற்குக் காரணம், அப் பெருமான் அனைத்திலும் சமரசங் கண்டதனுலேயே யாகும். சமயங்களிடையே சமரசத்தை நிலைநாட்டினுர். வேதாந்த சித்தாந்திகளிடையே சமரசத்தை நிலைபெறச் செய்தார். இல்லறந் துறவறங்களிடையேயும் சமரசத்தைக் கண்டார். அடிகளார் இவ்விரு அறங்களையும் இரு கண்களாகப் போற்றிய இல்லறத் துறவி யாவார்; எந்த நிலையில்? அருட் செயலில் நின்ருல் மட்டுமேயாம்.

இல்லறம் பெரும்பான்மை; துறவறம் சிறுபான்மை. துறவறத்தில் நிற்பார் பசி என்ருல் இல்லறத்தாரை நாடுவர். இல்லறத்தார் ஞான நிலை அடையவேண்டின் துறவறத்தாரை நாடுதல் வழக்கு. இவ்விருவரும் அருள்நிலையில் நின்று செயல்படுவதே சிறப்பு. தவசிகள், யோகிகள், பிரமச்சாரிகள் ஆகிய மூவர்க்கும் பசி, நோய், குளிர் ஆகிய நேர்ந்தபோது உணவும், மருந்தும், உடையும் அளித்துக் காத்தல் இல்வாழ்வானின் கடமையாகும் என பொதுமறை பகர்கின்றது.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

மற்றும், துறவிகளுக்கும் ஏழைகளுக்கும் இயன்றன அளித்தும், இறந்தவர்க்கு நீர்க் கடன் முதலியன செய்தும் துணை நிற்க வேண்டியவர் இல்லறத்தாரே யாவர்.

துறந்தார்க்குந் துவ்வா தார்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

இங்ஙனம் இல்வாழ்வான் தங்கடமையாற்ற வேண்டியவராகின்ருர். இவை ஆற்றுங்கால் "அவனன்றி ஓரணுவும் அசையாது" எனும் அருட்செயலை நினைவிற் கொண்டு ஆற்றுதலே சிறப்புடைத்தாகும். இவர்களே உண்மையான இல்லற வாழ்க்கையை மேற்கொண்டவர்களாவர். துறவு பூண்டவரும் அருள் நிறைவில் நிற்றலே செந்தண்மை உடைத்தாகும். இங்ஙனமன்றி மாறுபட்டு நிற்பவர் யாவர்? என்பதை, தாயுமான அடிகளாரின் இளவலும், மாணுக்கருமாகிய அருளைய பிள்ளை அவர்கள், தாயுமானவரைப் போற்றிப் பாடிய அகவலில் வருமாறு பகர்கின்ருர்:

"இல்லறத் திருந்தும் இதயம் அடக்கிய
வல்லவன் தானே மகாயோகி என்ருேன்
துறவறத் திருந்தும் சூழ்மனக் குரங்கொன்று
அறவகை யறியான் அஞ்ஞானி என்ருேன்"

தாயுமான அடிகளார் இல்லறமேற்று வாழ்ந்து, கனகசபாபதி என்ற அரும் புதல்வனை ஈன்று இறைவனடி சார்ந்த துணைவியார் மட்டுவார்குழலியம்மைக்கு ஈமக்கடன் முடித்துப் பற்ருெழிந்தார். தமயனுர் சிவசிதம்பரத்திடம் கனகசபாபதியை ஒப்படைத்து துறவறம் மேற்கொண்ட ஞானியாவார்.

என்செயினும் என்பெறினும் என்இறைவா ஏழையன்யான்
நின்செயல்என் றுன்னும் நினைவுவரக் காண்பேனே

என்று திருவருட் செயலையே நினைவாகக்கொண்டு இல்லறம் துறவறம் ஆகிய இரண்டனையும் சமநிலையில் போற்றிய மாமேதையாவார். இப்

பெருமையினை பட்டினத்தடிகள் திருவேகம்பமாலையில் முதற் பாடலாகக் கூறுகின்ருர்;

அறந்தா னியற்றும் அவனிலும் கோடி யதிகமில்லந்
துறந்தான் அவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தான் அறக்கற்(று) அறிவோ டிருந்(து)இரு வாதனையற்று
இறந்தான் பெருமையை என்சொல்லு வேன்கச்சி ஏகம்பனே.

உலகத்தாரின் பழிச் சொல்லுக்கு ஆளாகாத அருட்செயலில் நின்று இல்லறம் நடாததுவது சிறப்புமிகு இல்வாழ்க்கையாகும். அதனில் பற்றொழிந்து துறவற வாழ்க்கை மேற்கொள்பவர் இல்லறத்தாறினும் கோடி மடங்கு மேம்பட்டவராவர். நினைவொன்றும நினையாமல் நிற்கும் அகத் துறவு பூண்டவர் அவரினும் நூறு கோடி மடங்கு உயர்ந்தவராவர். இங்ஙனம அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் ஆகிய மறச் செயல்கள் நங்கி, தூய வாலறிவனுகிய பரம்பொருளின் திருவடி தொழுது நல்வினை தீவினைகளகற்றி, யான் எனும செருக்கிறந்து இருப்பவரின் மாண்பினை என்னென்று கூறுவேன்? என போற்றுவதற்குச் சொற்கள் கிடைக்காமல் தடுமாறுகின்ருர் பட்டினத்தடிகளார். மனேநிலையில் செய்யும் செயல்களனைத்தும நம்மைச் சாரும். உணர்வு நிலையில் செயல்படுவன நம்மைச் சாரா.

கயிற்றைக் கொண்டு பம்பரத்தைச் சுழற்றிவிட்டால் வேகம் உள்ளளவும் சுழன்று நினறுவிடும். பரம்பொருள் எந்தக் கயிற்றைக் கொணடு பூமிமுதலான அண்ட கோளங்களைச் சுழலவிட்டிருக்கின ருன்? அவை இன்றளவும் தன் சுழற்சியினின்றும் நின்றதுண்டோ? என்னே வியப்பு!

செகத்தையெல்லாம் அணுவளவும் சிதருவண்ணம்
சேர்த்(து) அணுவுள வைப்பைஅணுத் திரளையெல்லாம்
மகத்துவமாப் பிரமாண்ட மாகச்செய்யும்
வல்லவா நீநினைத்த வாறே யெல்லாம்

என்று தாயுமான அடிகளார் இறைவனின் திருவருட் செயலை நினைந்து வியக்கின்ருர். சீவர்களான நாமும சுழனறுகொண்டே இருக்கின ருேம். நல்வினை தீவினை எனும் கயிற்றினுல் நம்மை ஆட்டுவிக்கின்ருன்.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணு தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே.

இது அப்பர் சுவாமிகள் கண்ட அருட்செயல்.

நாம் உடலெடுக்கும் முன்னமேயே உலகத்தையும் நுகர்வதற்கான பொருள்களையும் படைத்துவைத்து நம்மை அதனுள் ஆட்டிவைக்கின்ருன் இறைவன். ஆட்டத்திற்குக் காரணம் மனம். அதனின்றும்

விடுபட உணர்வு நிலையில் உறுதியுடன் நிற்கப் பழகுதல் வேண்டும், மனதினின்றும் பத்துவித குணங்கள் பிரதிபலிக்கின்றன. மெய்யுணர்வில் நின்ருல் இதனின்றும் விடுபடலாம் உலகினின்றும், உடலினின்றும், மனதினின்றும் விடுபட, ஆட்டிவைக்கும் சூட்சுமக் கயிற்றைக் கண்டுபிடிக்க வேண்டும். சான்ருேர் எனப்படுவோர் அருட்செயலில் நின்று இதனைக் கண்டுபிடித்தனர். இங்ஙனம் திருவருட் செயலில் நின்று துறவறம் மேற்கொண்ட குவாராபாயின் கதையினைக் காண்போம்.

வேதியர் ஒருவர் கோவில் அருச்சகராகப் பணிபுரிந்து வந்தார். இல்லற தருமங்களை இனிதே கைக்கொண்டு சிறிதும் வழுவாது வாழ்ந்து வந்தார். எல்லாம் ஈசன் செயல் என்ற எண்ணம் கொண்ட அவருக்கு வாய்த்த துணைவியாரோ "தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலா"ளாகிய பெண்ணுக, மங்கையர் திலகமாக இருந்தார். தமக்குண்டான ஊதியத்தில் தாம் உண்டு, பசி என்ருேர்க்குப் புசி என்று வழங்கினர். "இல்லதென் இல்லவள் மாண்பானுல உள்ளதென் இல்லவள் மாணுக்கடை" என்பார் பொய்யா மொழி. அஃதாவது, மனைவி நற்பண்பு உடையவளாகில் வாழ்க்கையில் இல்லாதது எனபது ஒன்றுமில்லை. நற்பண்பு இல்லாதவளானுல் இருப்பது என்ன? இருந்துதான் பயன் என்ன? என்பதாகும்.

வேதியரின் துணைவியாரோ உள்ளதே போதும் என்ற மனப்பான்மையுடன் எளிய நிலையிலும் அரசபோகத்தைவிட இன்பமயமான வாழ்க்கை நடாத்தினுர். தெய்வ அருளை நினைவுட்கொண்டதே இதற்குக் காரணமாகும். இருப்பினும் ஒரே ஒரு சிறு குறைபாடு இருந்தது, இஃது உலகத்தாரின் பழிச்சொல்லை நீக்குவதற்காக ஏற்படும் குறைபாடாகும். "மங்கலமென்ப மனைமாட்சி மற்றுஅதன் நன்கலம் நன்மக்கட் பேறு' என பொதுமறை பகர்ந்தவாறு மகப்பேறு வேண்டி இருவரும் தவமிருந்தனர். வேண்டுவார்க்கு வேண்டுவன ஈபவன் அன்ருே இறைவன்? அருள்பாலித்தான். பிள்ளைக் கலிதீர பேரழகு முழுவதும் திரண்டு ஓர் உருவெடுத்துப் பெண் குழந்தை பிறந்தது. பெற்ருேர் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தனர். குவாராபாய் எனும் பெயர் சூட்டி, காப்பு, செங்கீரை, தால, சப்பாணி, முத்தம, வருகை, அம்புலி, கழங்கு, அம்மானை, ஊசல் ஆகிய பருவங்களில் குழந்தையின் ஆடல்களைக்கண்டு அகமகிழ்ந்தனர். பேதைப் பருவத்தில் திருமணம் செய்து வைப்பது முற்கால வழக்கு. ஒன்றுமறியாப் பேதைப் பருவத்தினளான குவாராபாயின் கழுத்தில மங்கல நாண் சூட்டப்பட்டது. விளையாட்டுப் பிள்ளையாதலால் அதுவும் ஒரு விளையாட்டு என்றே கருதினுள்.

வேதங்கள் மானிடருக்கு விதித்த ஆயுட்காலம் நூறு. அவர்கள் உறங்கிக் கழிப்பது ஐம்பது ஆண்டு காலம். பேதைப் பருவத்தில் பதினைந்து ஆண்டுகாலம் விளையாடிக் கழிக்கின்ருேம். எஞ்சிய வாழ்நாளை பசியினுலும் பிணியினுலும் மூப்பினுலும் துன்பமடைந்து பிறவி பயனற்றுப் போகின்றது. ஆகையினுல் பிறவியே வேண்டாம என்று தொண்டரடிப்பொடியாழ்வார் திருவரங்கத்துப் பெருமானை வேண்டுகின்ருர்.

பேதையாயிருந்த குவாராபாய் நாளடைவில் பெதும்பையாகி மங்கைப் பருவமடைந்தாள். மலர்ந்த மலர் பூசைக்கு உரித்தாவது போல, குவாராபாயின கழுத்தில் மங்கல நாண பூட்டிய கணவன வீட்டார் வருகை தந்து குவாராபாயை கணவன் வீட்டிறகு அனுப்பி

வைக்குமாறு கோரினர். இதை அறிந்தாள் குவாரா. முற்பிறவியில் செய்த தவப்பயன் அறிவை விளக்கஞ் செய்தது. தனியறையில் இருந்து சிந்தித்தாள். அந்தோ! ஈதென்ன மாயை? எத்துணைப் பிறவிகளில் திருமணம் புரிந்து மக்களை ஈன்றெடுத்து வாழ்க்கை எனும் துயர்க் கடலில் அழுந்தி யிருக்கின்றேன்! மீண்டும் அதே துன்பக் கடலுள் மூழ்குவதா? வேண்டவே வேண்டாம். தாய், தந்தை, கணவன், சுற்றம் யாவும் இறைவன் ஒருவனேயன்றோ? அவனுடைய திருவடிகளையே தஞ்சமடைவேன் என்று திடச் சித்தம் கொண்டாள். 'உடனே வெளியேறு' என்று உள்ளத்தினுள்ளே குரல் பிறந்தது. வயதைப் பொருட்படுத்தவில்லை. இரவு நேரமாகிய காலத்தை நினைத்தாளில்லை. உடுத்திருந்த ஆடையோடு யாருமறியாமல் வெளியேறினாள். பசி, தாகம், பிணி ஏதும் அறிந்தாளில்லை. நினைவெல்லாம் சொல்லினாலும் அளவையினாலும் பொருளாலும் அளந்து பார்க்கவியலாத அருளாம் பரம்பொருளையே நாடி நின்றது. நடை நடந்த அவளது கால்கள் நேரே பிருந்தாவனம் சென்று அடைந்தன. ஆங்கே ஒரு மரத்தடியில் அமர்ந்தாள். ஒருமை மனதானாள். ஆராரும் அறியாத சூதான வெளியில் வெளியாகின்ற துரியநிலைக்குச் சென்று இறைவனின் அருட்கூத்தைக் கண்டு லயித்திருந்தாள்.

மலர்ந்த மலராகிய செல்வமகள் காணாது துடித்தனர் பெற்றோர். தேடாத இடமில்லை. பாசம் பரிதவிக்கச் செய்தது. மானம் வாழ்க்கையையே தளர்வுறச் செய்தது. இருதலைக் கொள்ளி எறும்பாக துயர்க் கடலுள் அழுந்தினர்.

காணாத பொருளை வெளியுலகத்தார் தேடுவதைப்போன்று சாதகர் உள்ளுலகில் தேடுகின்றனர்; எதை? மெய்ப்பொருளை! ''தேடாது தேடுவோர் தேட்டற்ற தேட்டமே'' என்பார் தாயுமானவர்.

''தேடினேன் திக்கனைத்தும் தெண்டனிட்டேன் சிந்தைநைந்து
வாடினேன் என்மயக்கம் மாற்றாய் பராபரமே''

என்ற அடிகளார், அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகிய அரும்பொருளைக் கண்டனர். ''எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்கும் ஒன்றாய் முட்டித் ததும்பி முளைத்தோங்கும் சோதியைக்'' கண்டார் பாரனைத்துந் துறந்த பட்டினத்தடிகளார். ''தேடித் தேடொணாத் தேவனை என்னுளே தேடி நான் கண்டு கொண்டேன்'' என்றனர் அப்பர் சுவாமிகள்.

குவாராபாயின் தந்தை மகளைப் பல்வேறு இடங்களிலும் தேடிக் காணப்பெறாது வருந்தி கடைசியாகப் பிருந்தாவனம் நோக்கிப் பயணமானார் பிருந்தாவனம் சென்றடைந்ததும் அவரின் உள்ளத்தில் புத்துணர்ச்சிப் பிறந்தது. சுமைகள் நீங்கப் பெற்றவராக உணர்ந்த அவர் கண்ட காட்சி வியக்கச் செய்தது.! தன்னை மறந்து ஏகாந்த இன்பத்தில் கண்மூடி மௌனியாக அமர்ந்து நிட்டையிலிருக்கும் தன் செல்வ மகளைக் கண்டார். தாவிச் சென்று மகளே! என்று அழைத்தார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் அருவியாகப் பெருக்கெடுத்தது. மணக் கோலத்தில் கண்டுகளிக்க வேண்டிய நான் உன்னை இத் தவக் கோலத்தில் காண்கின்றேனே! எங்களைத் துயரக் கடலில் தள்ளிவிட்டு நீ தனித்திருக்க வேண்டியதன் அவசியம் என்ன? என்றெல்லாம் பலவாறு கதறினார். அவளோ வேதங் கடந்து, தத்துவங் கடந்து நிற்கும் தனிப் பொருளை குணமற்ற நிலையில், அறிவால் அறிந்து

பேரின்பத்தில் திளைத்திருந்தாள். இவ்வரிய நிலையினை அருணகிரிப் பெருமான் வருமாறு பகர்கின்றார்;

அகரமுத லெனவுரைசெய் ஐம்பத்தொ ரக்ஷரமும்
அகிலகலை களும்வெகுவி தங்கொண்ட தத்துவமும்
அபரிமித சுருதியும டங்குந்த னிப்பொருளை
எப்பொருளு மாய

அறிவையறி பவரறியும் இன்பந்த னைத்துரிய
முடிவைஅடி நடுமுடிவில் துங்கந்த னைச்சிறிய
அணுவையணு வினின்மலமு நெஞ்சுங்கு ணத்ரயமு
மற்றதொரு காலம்;

நிகழும்வடி வினைமுடிவி லொன்றென் றிருப்பதனை
நிறைவுகுறை வொழிவறநி றைந்தெங்கு நிற்பதனை
நிகர்பகர அரியதைவி சும்பின்பு ரத்ரயமெ
ரித்தபெரு மானும்

நிருபகுரு பரகுமர என்றென்று பத்திகொடு
பரவஅரு ளியமவுன மந்த்ரந்த னைப்பழைய
நினதுவழி யடிமையும்வி ளங்கும்ப டிக்கினிது
ணர்த்தியருள் வாயே

தகுதகுகு தகுதகுகு தந்தந்த குத்தகுகு
டிகுடிகுகு டிகுடிகுகு டிண்டிணடி டிக்குடிகு
தகுதகெண கெணசெகுத தந்தந்த ரித்தகுத
தத்ததகு தீதோ

தனதனன தனதனன தந்தந்த னத்ததன
டுடுடுடுடு டுடுடுடுடு டுணடுண்டு டுட்டுடுடு
தரரரர ரரரரர யெனவென்று டக்கையுமு
டுக்கையுமி யாவும்;

மொகுமொகென அதிரமுதி ரண்டப்பி ளக்கநிமிர்
அலகைகர ணமிடவுல கெங்கும்ப்ர மிக்கநட
முடுகுபயி ரவர்பவுரி கொண்டின்பு றப்படுக
ளத்திலொரு கோடி

முதுகழுகு கொடிகருட னங்கம்பொ ரக்குருதி
நதிபெருக வெகுமுகக வந்தங்கள் நிர்த்தமிட
முரசதிர நிசிசரரை வென்றிந்தி ரற்கரச
ளித்தபெரு மாளே.

பரம்பொருளின் இலட்சணங்களை அருணகிரிப்பெருமான் உள்ளங்கை நெல்லியங் கனியென இப் பாடலில் கூறியுள்ளார். இப் பாடல் ஓர் அற்புதப் படைப்பெனவே கூறலாம். அறிவை அறிந்தவரே அவ்வறிவிலூறும் ஆனந்த வெள்ளத்தில் திளைக்க முடியும் என்பதனை இதன்வழி ஆழ்ந்து உணர்ந்து நிற்போமாக!

இத்தகைய இன்பத்தில் இனிதிருந்த குவாராபாய், தந்தையின் பாச உணர்ச்சியினால் திட்டை கலைக்கப்பட்டு மனோ நிலைக்கு இறங்கினாள். கண்களைத் திறந்தாள். மகளைத் தேடியலைந்து உருமாறியிருந்த தந்தையைக் கண்டாள். மகளே! ஈதென்ன கோலம்? தாய் தந்தையற்ற அனாதைபோல இங்கே இருக்கிறாயே! உன்னை அன்போடு பாதுகாக்க உன் மனதுக்கேற்ற மணாளன் இருக்க நீயேன் இங்கு தனித்து வந்தாய்! இல்லறத்தில் ஈடுபட்டு எங்களையெல்லாம் மன மகிழச் செய்யக்கூடாதா! அம்மா! என்னுடன்வா. உன் தாய் உன் பிரிவாற்றாமையால் ஊணுறக்கம் மறந்து உயிரில்லாத வெற்றுடலாக கிடக்கின்றார் என்று கண்களில் நீர்அருவிபாய அன்போடு அழைத்தார் தந்தை. அப்பா! ஆசைக்கு அளவேது! உலகப் பாசத்திற்கும் ஓர் எல்லையுண்டோ! தாயும் தந்தையுமாக இருந்து அம்மையப்பனாக நம்மையெல்லாம் காத்து அருள்புரியும் பரம்பொருளல்லவோ யாவர்க்கும் துணை! அவனுடைய இணையடிகளாகிய பேரின்பமே யான் வேண்டுவதன்றி சிற்றளவுள்ள இவ்வுலக இன்பங்கள் வேண்டேன். மன்னித்து விடுங்கள் என்று தெளிந்த அறிவோடு அடக்கமாகக் கூறினாள் குவாராபாய்,

மகளின் பேச்சுக்கு மறுவார்த்தைக்கூற வியலாத ஊமையானார் தந்தை. ஆனாலும் ஒரு வேண்டுகோள் விடுத்தார்; "என் அன்புச் செல்வமே! இந்த இடத்தில் நிராதரவாக தனியே இருந்து செய்யும் தவத்தை நம் வீட்டில் தனியறையில் இருந்து செய்யக்கூடாதா? உன் விருப்பப்படியே இல்வாழ்க்கை வேண்டாம். உனக்கு எவ்வித இடையூறும் வாராமல் பார்த்துக்கொள்கிறோம்" என்று வேண்டினார்:

"எல்லாம் உன் அடிமையே, எல்லாம் உன் உடைமையே, எல்லாம் உன்னுடைய செயலே" என்று 'தாயுமானவர் கூறியவாறு எல்லாம் இறைவனருள் என்று தந்தையின் கருத்துக்கு உடன்பட்டுப் புறப்பட்டாள். வீடு வந்து சேர்ந்தனர். மகளின் பிரிவுத்துயரில் மூழ்கியிருந்த தாய் மகளைக்கண்டதும் மடைதிறந்த வெள்ளமென ஓடித் தழுவி உச்சிமோந்து ஆனந்தக்கண்ணீர் வடித்தாள். தந்தையின் வாக்குப்படி தனி அறை ஒதுக்கப்பட்டது. மகளின் தவத்துக்கு எவ்வித இடையூறும் வாராமல் காத்தனர்,

இறைவனின் அருட்செயலை நினைந்துருகிப் பாடத் தொடங்கினாள் குவாராபாய். தம்புரா சுருதி கூட்டி ஓங்கார ஒலியை எழுப்பியது.

ராமச் சந்த்ர ரகுவீர ராமச்சந்த்ர ரணதீர
ராமச் சந்த்ர ரகுராம ராமச்சந்த்ர பரந்தாமா
ராமச் சந்த்ர ரகுநாத ராமச்சந்த்ர ஜகந்நாதா
ராமச் சந்த்ர மமபந்தோ ராமச்சந்த்ர தயாஸிந்தோ

இறையன்பின் வெள்ளத்தில் மூழ்கிய அவள் குரல் சுருதியில் இழைந்தது. மனம் பக்தியில் குழைந்தது. பெற்றோரின் உள்ளமெல்லாம் உருகியது. தெய்வ அருள்பெற்ற குவாராபாயின் செய்தி நாளடைவில் ஊரெங்கும் பரவியது. அனைவரும் அவளைப்பற்றி தெய்வப்பிறவி என்றும் ஞானி என்றும் பலவாறு போற்றலாயினர். அந்நாட்டையாண்ட மன்னனுக்கும் இச் செய்தி வியப்புக்குரியதாக எட்டியது, அவளை நேரில் காணவேண்டும் என ஆவல் கொண்டான். அமைச்சர் மூலமாக குவாராபாயின் பெற்றோரிடம் அனுமதி கோரினான்

மன்னர் தம் வீடு நோக்கி வருவதானல் மறுப்பவர் யாவர்? அரசர் வரவேற்கப்பட்டார்.

இறைவனருள் நாடி ஏகாந்தத்தில் இருப்பவரை உலகமே கை கூப்பித் தொழும்! இந்திரனுலகில் இருக்கும் கற்பகத் தருவும் பதும நிதி சங்கநிதிகளும் அவர்களுக்குப் பணிசெயும் ஏவளாளராக நிற்கும்! இந்திரன் முதலான தேவர்களும் விஜய ஜய என்று ஆசி கூறி நிற்பர் எனில்! நாடாளும் மன்னவன் எம்மட்டோ? மன்னன் குவாரா பாயின் எதிரில் வந்து நின்ருன். தானகவே அமர்ந்தான். குவாரா பாய் புறக்கண்களை மூடி அகக்கண் விழித்து அருள் நிலையில் திளைத் திருந்தாள் கண்கொட்டாமல் அவளின் உருவத்தைக் கண்டு களித் தான் மன்னன். அரண்மனை திரும்பினன். எண்ணமெல்லாம் குவா ராபாயின் உருவத்தையே வட்டமிட்டன. மாலை உபாதை மனத்தடு மாற்றந்தந்தது. எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கினன். அவளது அழகு முகம் சந்திரனைக்தோன்றி வருத்தியது வயதும் கட்டான உடலும் அவனை உறக்கங்கொள்ளச்செய்யாது துன்புறுத்தின. காமத்தீ சுட்டெறித்தது, எப்படியும் அவளை அடைய வேண்டும் என்று உறுதி பூண்டான். ஏழை வேதியர்தானே! பொருள் கொடுத்துப் பெறலாம் என்று அற்ப ஆசைகொண்டான். விடிந்ததும் தூது அனுப்பினன் வேதியரிடம்!

இதைக்கேட்ட வேதியரின் உள்ளம் கொதிப்படைந்தது. துடி துடித்துப் போனர். நாடாளும் மன்னவனின் செயலா இது? மனம் வருந்தினன். தூதுவரே! இது மன்னருக்குத் தகாத செயல்! அழியும் உலக ஆசைகளை அகற்றி அழியாப் பொருளான திருவருள் நாட்டங் கொண்டிருக்கும் குவாராபாய் இச் செய்தியறிந்தால் தவக்கனலால் எரித்து விடுவாள்! பெண்ணுசையால் சந்திரன், இந்திரன், இராவ ணன், நகுஷன் இவர்களின் கதி என்னவாயிற்று என்பது மன்னர் அறியாரோ என்று சினமிகுந்து கூறினர். செய்தியறிந்த மன்னன் தோல்வியை ஏற்க இயலாதவனுகி இழிச்செயல் செய்ய எண்ணினன். ஏழையாயிருந்தும் அரசபோகத்தைப் பெற மறுத்துவிட்டனரே! என்று பலாத்காரச் செயலில் ஈடுபட்டான். அன்றிரவு நடுயாமம்! எங்கும் காரிருள் கவ்வியிருந்தது. அவன் மனமும் காமத்தால் கருகியிருந் தமையால் கருநிறமுடைய ஆடையால் தன் உடல் முழுவதும் மறைத் துக்கொண்டான். யாருமறியாவண்ணம் குவாராபாய் வீடுநோக்கிப் பதுங்கிப் பதுங்கித் திருடனைப்போல வந்தான். நாய்களின் கண்களுக்கு கருத்த உருவம் தென்படவே குரைக்கத் தொடங்கின. செடிகளின் மறைவில் பதுங்கினன். என்னே மதியீனம்! நாடாளும் மன்னன் பெண்ணுசையால் நாய்க்குப் பயந்து பதுங்கும் நிலைமை ஏற்பட்டது! உடலெல்லாம் வியர்த்தது. நாய்கள் காட்டிக் கொடுத்துவிடுமோ என்ற அச்சம் நடுக்கத்தைக் கொடுத்தது. மயங்கி வீழ்ந்தான். உணர்வு அயர்ந்தது. சொப்பன அவத்தைப் பற்றியது:

நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. மறுகரையில் பரம்பொரு ளின் திருமுன்னர் குவாராபாய் அமர்ந்து தன்னை மறந்து நாமகீர்த்தனை பாடிப் பரவசத்தில் இருந்தாள். கரையோரமாக நின்றிருந்த மன்னனை விழுங்குவதற்காக முதலையொன்று வாயைப் பிளந்துகொண்டு நெருங் கியது. அலறித் துடித்த மன்னன் கனவுலகினின்றும் இறங்கி விழித் தெழுந்தான். உடல், நீரில் மூழ்கியவனைப்போல நனைந்திருந்தது.

மன்ன! சிற்றெறும்பு பெரு நெருப்பு மலையை விழுங்க இயலுமா? திரும்பிச் செல்! என்று உள்ளத்தினின்றும் ஒலித்தது. வந்தவழியே திரும்பி ஓடினன். அரண்மனையுள் புகுந்து படுக்கையில் புரண்டான். "தன்வினை தன்னைச் சுடும்" என்றவாறு அவன் உள்ளமே அவனை தீயிலிட்டு வதைத்தது. தவறை உணர்ந்தான். இரவு முழுவதும் விழி இமைக்காமல் வேதனையுற்றான். அறியாமை எனும் இருளைக் கிழித்து அறிவு எனும் ஒளியைக் கொடுப்பதுபோல பகலவன் தோன்றினன்.

நீராடி தூய வெண்ணிற ஆடையுடுத்தி அருச்சனைக்குரிய பொருள்களும், பொன்னும், மணியும் ஏந்தி அமைச்சர் புடைசூழ குவாராபாய் வீடு நோக்கி வந்தான். அவளின் திருவடிக்கீழ் அவற்றை வைத்து அங்கமெல்லாம் தரைமீது படுமாறு வீழ்ந்து பணிந்தான். "தாயே! அறிவிலியாகிய ஏழையின் பிழை பொறுத்து கரையேற்றுவாய்! என கண்களில் நீர் ததும்ப கூறினன். பக்குவப்பட்ட மன்னனுக்குத் திருவருட் பார்வையால் உபதேசித்தாள் குவாராபாய். அவளின் தரிசனத்தால் அமைச்சர் முதலானோர் நற்பேறு பெற்றனர். இதையறிந்த மக்களும் குவாராபாயை குருவாக ஏற்று உபதேசம் பெற்று அமைதி அடைந்தனர். அதனல் நாடும் செழிப்புற்று விளங்கியது.

இக்கதையினின்றும் தாயுமான அடிகளார் கூறியவாறு, திருவருட் செயலுக்குட்பட்டு ஏற்கும் இல்லறம் துறவறம் எதுவாயினும், மேன்மையுடையனவேயாம் என்பதை அறிகின்ருேம்.

WINGS OF DIVINE WISDOM

by YOGI SIVALINGAM—U. S. A.

I am always with you, when you remember me,
Divine thoughts always give great eye-opener,
Divinely deeply meditate, then the truth will appear,
Meditate without forms,
Meditate without thoughts.
Meditate without the body,
Meditate without the you.
Practice, practice then the third-eye will appear at the
 Sushumna-nadi,
Practice, practice then the Roaring sound always hear from
 the divine forms.
Practice, practice then the divine life will be yours,
Practice, practice then the divine knowledge always within,
Practice, practice then the divine god and gods always with
 you.
Practice, practice whatever do you know, without doubts,
Practice, practice with one divine-form,
Practice. practice with yourself within.
Doing is nothing, thinking is nothing,

Working is nothing,
Taught is nothing, Selfless is nothing,
Divine life is a great Godly life,
Divine life is a great Selfless work,
Divine life is a great Painless prospering,
Divine life is a great depend on none ideal works,
Divine life is a great divine prosper work,
Divine life is a great Inner art,
Divine life is a great Inner purifying mental-aspects,
Divine life is a great Self treatment understandings.
Divine life is a great Self depend on with the God forms,
Divine life is a great Steadiness,
Divine life is a great Strengthness life,
Divine life is a great mind & body together life.
Divine life is a great knowing the knowledge with the divine spirit life,
Purity always gives great Reality,
Purity gives one uplifting the Lord's divine home,
Purity gives great Inner-steadiness,
Purity gives Inner opening key,
Purity gives knowing the Self,
Purity gives great Divine love,
Purity gives great Prosper to the Lord's divine home,
Purity gives proper thoughts, teachings, and knowing the divine works.
Purity gives great way to attain the nectar of the Immortality;
Purity gives great path-for-prosper. *

Emotional always destroys one's life,
Emotionalist always has more uncomfortable,
Emotional gives great pain & sorrows,
Endless problems mean emotional ideas,
Peaceful life means Inner-paece.
Wake up, watch out, touch it, then you are THAT,
Do some meditations, do some helpful for your SOUL,
There is no bondage for the Spiritualists,
Bondage means inner unclearness,
Oh, dear, the time always never true, the pleasure never true.
Control the emotions,
Control the plenty of thoughts,
Controi the demons of the shadow of the mind,
Weakness is great emotions,
No one lives forever in this world,
Freedom means having tools to fight one's own dust and ignorance. *

பதார்த்த குண போதினி

மூலிகை குணானுபவத்தை விளக்கும் சிறந்த நூல்

வைத்திய ரத்தினம் வி. பலராமய்யா, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட நீதிபதி (ஓய்வு)

முகவுரை

பதார்த்த குணங்களைப்பற்றி பல சித்த மருத்துவ மேதைகள் வெகு விரிவாகவும், விளக்கமாகவும் எழுதியுள்ள நூல்கள் பல உள்ளன. ஏழை, எளிய மருத்துவர்களின் கைக்கடக்கட்டும் வகையிலும், எளிதாக மருந்துகளின் குணங்களைக் குறிப்பது போன்று இச்சிறு நூலை எழுத லாயிற்று. இதில் ஆசிரியர் அனுபவத்தை யொட்டிய வெகு சில மூலிகைகளின குணங்களைச் சேர்ததும், ஆசிரியர் கருத்தில் அவசிய மல்லாத சில குணங்களை விட்டும் இருப்பதைப் பார்க்கலாம: புத்தகங் களில் காணப்படாத பல அரிய ஔஷதங்களின் குணங்களை அறிந்த பெரியார்கள் பலர் உள்ளனர். அப் பெரியார்கள தங்கள் அனுப வங்களை ஆசிரியருக்கு எழுதினுல் மறுபதிப்பில் சேர்க்க வாய்ப் பிருக்கும்.

போகர் கருக்கிடையென்ற பாடல்களிலிருந்து இராமலிங்கசுவாமி ஔஷத குணானுபவமென்ற குறிப்புகளை அருட்பாவில எழுதியுள்ளார். அதைப்போன்றே மூல நூலாகிய போகர் கருக்கிடையிலிருநது ஔஷத குணங்களைப்பற்றி குறிப்புகள் ஆசிரியர் எழுதிய ''வாதவைதத்யத் துக்காதி''யென்ற நூலில் காணலாம, இந்நூலுடன் அதையும் படிபபது நலம. மற்றும் ஷெ நூலில் சரக்கு சுதது முறைகளும, பாஷாணாதி உலோகவகைகளாலுண்டாகும் விபரீத நோய்களுக்கு முறபபும, சத்துருமித்துரு சரக்குகளின தன்மையையும விளககமாய் எழுதி யுள்ளது. ஆகவே இந்நூலில் அவைகளைப்பற்றி எழுதவில்லை.

மேலும சாகாநிலை கொடுக்கும் குருமருந்தாகிய முப்புவைப்பற்றி ஆராய்ச்சி செய்பவர்களுக்கு ''மூப்பு குரு'' என்ற சிறுநூலும, அது சமபந்தப்பட்ட அகர உகர மகரங்களின தத்துவத்தைபபறறி அமுத கலசமென்னும் நூலும் இவ்வாசிரியரால் எழுதப்பெற்று வெளியாகி யுள்ளது.

பல சித்த வைத்திய நண்பர்கள் பதார்த்த குணங்களைப்பற்றி ஒரு சிறிய நூலிருந்தால் பயனளிக்குமென்ற கருத்தைப் பூர்த்தி செய்ய இந்நூல வெளிவர வாய்ப்புண்டாக்கியது.

பதார்த்த குண சிந்தாமணி யென்னும் நூலை ஆதாரமாகக் கொண்டு இந்நூல் தயாரிக்கப்பட்டது. இதில நீரின்வகை, எண்ணெய் வகை, சாண வகை, மூத்திர வகை, மது வகை, தேன் வகை, மர வகை, செடி வகை, கொடி வகை, வேர் வகை, மரப்பட்டை வகை, கழங்கு வகை, கடை சரக்கின் வகை, பாஷாண வகை, உலோக வகை என்னும தலைப்புகளின்கீழ் முடிந்த அளவுக்கு விவரமாய் அவைகளின் குணங்களைப்பற்றி எழுதப்பட்டுள்ளது. இதை வைத்தியர்களன்னியில் எல்லோரும் படிப்பதால் உடலை பாதுகாக்கும் மூலிகைகளின் அதி அற்புதமான குணங்களை அறிந்து அவற்றை உபயோகித்து ஆரோக

கிய வாழ்வைப்பெற வாய்ப்புண்டாகும். மற்றும் பொதுவாக தினசரி நாம் உணவு சாப்பிடும் முறைகள், ஸ்நான விதிகள், மருந்து உண்ணும் விதிகள் முதலியவைப்பற்றியும் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. இவ் விதிகளின்படி நடந்து கொண்டால் பிணிகள் நிச்சயமாய் தாக்காதென் பது சித்தர்கள் கருத்தாகும்.

ஒவ்வொரு வீட்டிலும் இந்நூல் இருத்தல் அவசியமென்பது ஆசிரியர் கருத்து.

(தொடரும்)

YOGASANAS

By Sri R. Meharbabu, B.Sc., M.A., B.T.

(Continued from previous issue)

ASANA

A person who practices Yogasanas is hale and healthy. It does not mean that he will have abnormal muscular growth both in the limbs and body, flat belly and capable of lifting heavy weight. These causes are due to physica activities and diet. They will never strengthen mind and sense. Yogasanas alone has the special qualities to actiate the internal organs of our body such as heart, blood vessels, brain, nerves, lungs, stomach, intenstine, colon Liver, spleen, bile, kidneys, skeleton systems etc., to function systematically.

To practice asanas, patience and perseverance are absolutely necessary. It is better to practice with the help of a good master in the art. If it is not properly done it may lead to disease. It is not a difficult matter to practice Yogasanas, Sage Patanjali says that asanes give a sound mind in a sound body. So asanas means steady mind and healthy body. Accordingly if a man secures steady and healthy body he could take his mind to the path of perfection. At this stage inspiration and expiration will come to a position. Blood circulation takes place, with the stoppage of mind. Due to this special circulation the muscles are reinforced and the nerves are strengthened. On account of this, the organs there, are strengthened. They function properly. In this manner, all the organs of our body are activated by different asanas and they function or secrete their enzymes properly. This resulting a sound body with a sound mind and sound senses, He will become extremely wiser and enjoy longevity.

PADMASANA — LOTUS POSE.

Procedure : Sit on a carpet or mat over a plain floor. If possible use tanned deer or tiger skin. Use underwear — tight fitting underwear is best suggested. Remove all other garments

including wrist watch. Place the right foot on the left thigh and the left foot over the right thigh. Both the heels should be closely placed on either side of the genital organ. Try to bring the posterior end of abdomen to be in touch with the ends of both the thighs. The knees should be in touch with floor. Stretch the back bone and sit properly. Stretch your hands and place the wrists over the knees. Make wider your palms and join index finger at the junction of thumb lines. Stretch the rest of the three fingers. This pose of Padmasana is congruent for meditation. At this stage without shaking his body and with staunch aim he should launch his sight at the junction of the eye brows. At the junction of the eye brows, a little deep inside and beneath the brain is hanging the pea-out size gland called Pitutory gland. It is also called — Master gland, because it has the control over all the other endocrine glands. This is the wheel of the 'Controller Supreme'. Over which the Pranavam 'OM' (the spirit of Soul or Prana or the spiritual sound A U M should be drawn in mind and try to fix the mind steadily. The very first exercise in due course will help for Pranayama—Breath Control or control of the senses. Prathyahara — Persevernce. Dharana — Relationship between Soul and Supreme, Dhyana — Pure Soul worship the Supreme. Samadi — Union of Soul and Supreme or immortality. So this exercise may be practised daily for about 5 minutes to 60 minutes.

Physical benefits: By doing Padmasanas every day, backbone (vertebral) and the spinal chord that passes through the vertebrale are strengthened. At the same time mind and soul are purified. All the 72000 pulsatory veins are functioning at a time.

வெட்டவெளி - II

S. முருகேச பாண்டியன் B.E.,

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சென்ற இதழில் சூனியமே எங்கும் நிறைந்த பொருளாய் இலங்குவதைப் பார்த்தோம். இப்போது அதனுடைய தன்மைகள் சிலவற்றைக் காணலாம். சூனியம் என்று கூறினுல் அது ஒன்றும் இல்லாத பொருளல்ல. 'இல்லை இல்லை யெனில் ஒன்றும் இல்லாதது அல்ல, இயல்பாகி என்றும் உள்ள இயற்கையாகி' என்று தாயுமானவர் இது பற்றியே கூறியிருக்கின்ருர்.

எங்கும் நிறைந்த இந்த வெட்டவெளியிலே எல்லாவகையான நுண்ணணுக்களும புதைந்திருக்கின்றன. சக்தியின் வடிவாகிய இரு ஃபோடான்கள் ஒன்ருேடொன்று மோதும்போது அவ்விரு ஃபோடான்களும் மறைந்து அவ்விடத்தில் புதைந்துள்ள தூலவடிவாகிய எலக்ட்ரான் அல்லது புரோட்டான் ஆகியவை வெளிப்படுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு நுண்ணணுவும் தோன்றும்போது அத்துடன் அதன் எதிர் இணையான (anti-particle) பாசிட்ரான் (positron) ஆன்ட்டி-புரோட்டன் (anti-proton) ஆகியவையும் தோன்றுகின்றன.

அதுபோல தூலவடிவான எலக்ட்ரானும் அதன் எதிரிணையான பாசிட்ரானும் ஒன்றையொன்று சந்திக்கும்போது அவையிரண்டும் மறைந்து அவற்றிலுள்ள சக்தி ஃபோடான்களாக வெளிப்படுகின்றது.

தோன்றிய யாவும் இவ்வாறு மறைந்துகொண்டே இருக்குமாயின் காணும் இப் பிரபஞ்சம் ஒரு நொடி நேரம்கூட நில்லாது. இது நிலைத்திருப்பதன் காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் இப் பூமியின்கண் புரோட்டான்களும், நியூட்ரான்களும், எலக்ட்ரான்களும் மிகுதியாகக் காணப்படுவதுபோல் அவற்றின் எதிரிணை நுண்ணணுக்கள் காணப்படுவதில்லை. இங்கு காணப்படும் நுண்ணணுக்களுடனே அவையும் தோன்றப் பெற்றிருப்பினும் அவை பிறிதோர் திசையிலே சென்று நாம் காணும் உலகத்தைப்போல் பிறிதோர் உலகமாகத் தோன்றப் பெற்றிருக்கக்கூடும். எனவே இவ்விரண்டு உலகங்களும் நிலைபெற்றிருப்பதற்கு அவற்றின் இடையே உள்ள இடைவெளியே காரணம் ஆகும்.

இவ்வகையிலே பார்த்தோமானால் நுண்ணணுக்களுக்கு தோற்ற நிலை, மறை நிலை ஆகிய இருநிலைகள் உண்டெனவும், சக்தியின் காரணமாக ஓர் நிலையில் இருந்து மற்ற நிலைக்குச் செல்கின்றன என்றும் தெரியவருகின்றது.

மற்றும் சிலர் ஈதர் என்ற பொருளே வெட்டவெளியாக ஓர் நீரோட்டம்போல் எங்கும் நிறைந்துள்ளது என்று கூறுகின்றனர். அதில் ஏற்படும் அலைகளும், சுழல்களும்போல் அண்டங்கள் யாவும் ஆகும். ஈதர் என்ற அப்பொருளை நாம் அறியமுடிவதில்லை. அதில் காணப்படும் அலைகளையும் சுழல்களையுமே நாம் காணுகின்றோம் என்றும் கூறுகின்றனர்.

அடுத்த இதழில் பிரபஞ்சம் உற்பத்தியானதுபற்றிய சில கருத்துகளைக் காணலாம்.

(தொடரும்)

செங்கையில் சுவாமிகள் விஜயம்

யோகாசன ஆலய நிறுவனரும் தலைவருமாகிய உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள், பொதுச் செயலர் திரு. C. இராமசாமி அவர்களுடன் 16—6—78 காலை 9-30 மணியளவில் செங்கல்பட்டுக்கு விஜயம் செய்தனர். செங்கை கிளைச் செயலர் திரு. A. ஆனந்தவேலு அவர்கள் வரவேற்றனர்.

பெரியநத்தம், பெரியரத்தினத் தெரு, எண் 3 இல்லத்தில் பிற்பகல் 3 மணிக்கு வேதாந்த வகுப்பில் சுவாமி அவர்கள், "வேதாந்தம்" என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

17—6—78 காலை, செங்கை சூப்பர் மார்க்கட்டு அருகிலுள்ள சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தில், சங்கத்தினரும் யோகாசன ஆலயத்தினரும் இணைந்து சிறப்புக் கூட்டம் அமைத்தனர். வித்துவான் உயர்திரு பூசை. ஆ. நமச்சிவாய முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். சுவாமியவர்கள், "மரணமிலாப் பெருவாழ்வு" எனும் பொருளில் வேதாந்த விளக்கவுரை நிகழ்த்தினார்கள். சென்னையிலிருந்து வருகைதந்த யோ. ஆலய மகளிர் பிரிவு செயலர் செல்வி R. சாந்தி B.Sc., மகளிர் யோகாசனப் பிரிவு செயலர் திருமதி S. இராஜம்மாள், விருதுநகர் மகளிர் பிரிவு செயலர் திருமதி K. மகமாயம்மாள் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். செல்வி சாந்தி அவர்கள் அருட்பாடல்கள் பாடினார். திருவாளர் பாண்டுரங்க ராவ் அவர்கள் வரவேற்புரையும், திருவாளர் மு. தங்கவேலு அவர்கள் நன்றியுரையும் கூறினர்

18—6—78 காலை, சுவாமிகளும் ஆலய அன்பர்களும் பாலாற்றங் கரைக்குச் சென்று பிரார்த்தனை நிகழ்த்தினர். 10 மணியளவில் பெரியநத்தம் ஷ முகவரியில் மாதாந்திர வேள்விப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. சுவாமிகள் வேள்வி செய்வதன் உள்ளுரைப் பொருளை விளக்கி உரை நிகழ்த்தினார்கள். பிற்பகல் 3-30 மணிக்கு சின்ன மணியக்காரத் தெருவில் வேதாந்த வகுப்பு நடைபெற்றது. சுவாமியவர்கள் "பெருவெளி" "இலிங்கம்" ஆகியவைப்பற்றி அருளுரை யாற்றினார்கள். செல்வி சாந்தி, திருமதி இராஜம்மாள், திருமதி K. மகமாயம்மாள் ஆகியோர் தங்கள் தங்கள் சேவைகளை எடுத்தியம்பினர். செயலாளர் மு. தங்கவேலு அவர்கள் நன்றி நவில பிரார்த்தனையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

யோ. ஆலய அங்கத்தினர்கள் திருமதிகள் கண்ணம்மாள்; காந்தாமணி அம்மையார், குப்பம்மாள், சிவகங்கையம்மாள் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க சுவாமியவர்கள் அவரவர் இல்லங்களுக்குச் சென்று பிரார்த்தனை நிகழ்த்தினார்கள். சுவாமிகள் செங்கை விஜயத்தின்போது செயலாளர்கள் திரு. A. ஆனந்தவேலு, திரு. மு. தங்கவேலு இருவரும் உடனிருந்து சேவை செய்தனர்.

ஆ. ர்.

திருமணம்



திருவாளர் A. தில்லைச் சிதம்பர நாடார் T. புஷ்பரத்தினம்மாள் ஆகியோரின் மகன் திருநிறைச் செல்வன் பாக்கியராஜனுக்கும், திருவாளர் A. S. கந்தசாமி நாடார் விலாசவதி அம்மாள் ஆகியோரின் மகள் திருநிறைச் செல்வி விஜயலட்சுமிக்கும் 19—6—78 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சென்னை வண்ணையம்பதி சீரங்கம்மாள் தெரு, எண் 95, மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற்றது.

யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் திருமணத்தை நடாத்திவைத்து வாழ்த்தியருளினர். மற்றும் உறவினர் நண்பர்கள் யாவரும் வருகைதந்து மணமக்களை வாழ்த்தினர்.

மணமக்கள் சார்பாக 'யோகாசன ஆலய விஜய' வளர்ச்சிக்கு ரூ. 102 நன்கொடை யளிக்கப்பட்டது. இருவீட்டாரும் யோகாசன ஆலயத்வைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

* * *

பந்துவார்பட்டி திரு. ப. மா. இராமைய நாடார் குமாரத்தி திருவளர் செல்வி தமிழ்ச் செல்விக்கும், கல்லுப்பட்டி லேட் M. சுப்பைய நாடார் குமாரன் திருவளர் செல்வன் ஜெயராஜிக்கும் 3—7—78 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு சென்னை இராயபுரம் ஆதம்சாயபு தெரு, எண் 59, இராஜரத்தின நாயகர் திருமண மண்டபத்தில் திருமணம் நிகழ்ந்தது. சென்னைவாழ் பந்துவார்பட்டி நாடார் உறவின் முறை மகிமை தலைவர் திரு. S. S துரைச்சாமி நாடார் அவர்கள் தலைமையில், ''யோகாசன ஆலய விஜயம்'' ஆசிரியர் புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்கள் திருமணத்தை நிகழ்த்தி வாழ்த்துரை வழங்கினர். மற்றும் சுற்றத்தினர் நண்பர்களும் வருகைதந்து சிறப்பித்தனர்.

மணமக்கள் சார்பாக 'யோகாசன ஆலய விஜய' வளர்ச்சிக்கு ரூ. 16 நன்கொடையளிக்கப்பட்டது.

* * *

சென்னை ஸ்ரீ தட்சிணாமூர்த்தி கோவில், யோ. ஆலய கிளை உறுப்பினர் திரு. T. K. அருணாசலம் அவர்களின் திருக்குமாரன் பன்னீர் செல்வனுக்கும், M. பாலையம் அவர்களின் திருக்குமாரத்தி டில்லிமா என வழங்கும் மகாலட்சுமிக்கும் சென்னை ஏழுகிணறு சமுதாய நிலையத்தில் 9—7—78 காலை 5 மணிக்குத் திருமணம் நடைபெற்றது. 'யோகாசன ஆலய விஜயம்' துணை மேலாளர் திரு. G. அண்ணாமலை அவர்கள் மணவாழ்த்து மடல் வாசித்தளித்தார்.

* * *

திருவாளர் கோவிந்தசாமி அவர்களின் குமாரனும், யோகாசன ஆலய அங்கத்தினருமான திருவளர் செல்வன் ஏழுமலைக்கும், திரு. A. சுப்பிரமணியன் அவர்களின் குமாரத்தி திருவளர் செல்வி சாந்திக்கும் 26—6—78 அன்று சென்னை குயப்பேட்டை செல்லப்ப முதலி தெரு, மல்லிகா திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. ஆலய அன்பர்கள் மணமக்களை வாழ்த்தினர்.

ஆர்க்காட்டில் ஆலய பிரசாரம்

ஆர்க்காடு மணிவாசகர் நிலைய உரிமையாளர் திருமிகு ஆ. மு. முனிசாமி நாயகர் அவர்கள் இல்லத்தில் 10—7—78 அன்று ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜை விழா நடைபெற்றது. அவ்வமயம் சென்னையிலிருந்து யோகாசன ஆலய பிரசாரகர் திரு. N குருலிங்கம், யோகாசனப் பிரிவு கிளைச் செயலர் திரு. மு. முனிரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். திரு. N. குருலிங்கம் அவர்கள், யோக ஆசனங்களின் நன்மைகள் விளக்கவுரையும், 'சச்சிதானந்த சிவம்' என்ற பொருளில் வேதாந்தச் சொற்பொழிவும் ஆற்றினார்கள். திரு. மு. முனிரத்தினம் அவர்கள், யோக ஆசனங்களைச் செய்து காண்பித்தும், ''தூய வாழ்க்கை'' என்ற பொருளில் சிறப்புரையும் ஆற்றினர், மணிவாசக நிலையத்தினர் யோகாசன ஆலய வளர்ச்சிக்காக ரூபாய் ஐம்பது நிதி வழங்கினர்.

சிறப்புச் சொற்பொழிவு

சென்னை வண்ணையம்பதி பேரம்பாலுசெட்டித் தெரு. அருள்மிகு கோதண்டராமர் கோவிலில் 4—7—78 செவ்வாய் மாலை 6 மணிக்குச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. யோ. ஆலய மகளிர் பிரிவு உறுப்பினர் திருமதி வசுந்தராதேவி முருகேச பாண்டியன் அவர்கள் தலைமை வகித்தார். 'யோகாசன ஆலய விஜயம்' ஆசிரியர் புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்கள் "அங்கிங்கெனாதபடி" எனும் தாயுமானவர் திருப்பாடலுக்கு சிறப்புரை ஆற்றினார். இராமலக்குமனார் அருளிசை வழங்கினார்கள். திருவாளர் S. K. மலைக்கனி (செயலர்) அவர்கள் வரவேற்புரையும், திருவாளர் பி. வெங்கடேசன் (அமைப்பாளர்) அவர்கள் நன்றியுரையும் நவின்றனர்.

ஸ்ரீ தாயுமானசுவாமி சன்மார்க்க சங்கம்

இராமநாதபுரம்.

அன்புடையீர்! ஆண்டு சந்தா ரூ. 12ம். ஆயுள் சந்தா ரூ. 101ம் செலுத்தி சங்கத்தின் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டுகிறோம். மற்றும். இராமநாதபுரம் லட்சுமிபுரம் ஊருணிக் கீழ்க்கரையில் அமைந்துள்ள தாயுமானவர் தபோவனத்தில், பூாவலர் சேதுபதி மகாராஜா அவர்கள் ஆசியோடு ரூ. 3 லட்சம் செலவில் பெரிய ஆலயத் திருப்பணி தொடங்க இருக்கிறது. அன்பர்கள் மன முவந்து பொருளுதவுமாறு வேண்டுகிறோம்.

சந்தா, நன்கொடை செலுத்துவோர் சங்கத்தில் அச்சு ரசீது பெற்றுக்கொள்ளவும். வெளியூர் அன்பர்கள் M O. அல்லது டிராப்ட் அனுப்பினால் அச்சு ரசீது, ஆலயப் பிரசாதம் தபாலில் அனுப்பப்படும். செலுத்த வேண்டிய முகவரி, M. V R. வெங்கட்ராமன் செட்டியார், பொருளாளர், ஸ்ரீ தாயுமானசுவாமி சன்மார்க்க சங்கம், அரண்மனை, இராமநாதபுரம்.

இங்ஙனம்

R. ரமணி, P. லெட்சுமண நாடார் செயலாளர்கள்

சூலத் தலையினில் தோற்றிடுஞ் சத்தியுஞ்
சூலத் தலையினில் சூழும்ஓங் காரத்தால்
சூலத் திடைவெளி தோற்றிடும் அஞ்செழுத்
தாலப் பதிக்கும் அடைவது வாமே.

மூன்று தலைகளையுடைய சூலத்தின் முனையில் சத்தியின் எழுத்தாகிய 'ய' கரம் அமைத்தல் வேண்டும். அச் சூலத்தைச் சுற்றி ஓங்காரம் அமைத்தல் வேண்டும். இடைவெளியில் திருவைந்தெழுத்து அமைத்தால் அதுவே இறைவனின் நிலைக்களமாகும்.

— திருமந்திரம்.

ஆவணி அவிட்டத் திருநாள் அழைப்பு!

18—8—78 (ஆவணித்திங்கள் 2-ம் நாள்) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் சென்னை வண்ணையம்பதி திருவொற்றியூர் நெடுஞ்சாலை 194, நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில் (தண்டையார்பேட்டை காவல் நிலையம் அருகில்) வேத வேள்வியும், தூய நூல் அணியும் சடங்கும் நிகழும், யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து ஆவணி அவிட்டத் திருநாளைப்பற்றிய அரிய விளக்கவுரை நிகழ்த்துவார்கள்.

காலை 9 மணிக்கு யோகாசன் ஆலய குழுவினரால் தெய்வீகப் பாடல், இசை நிகழ்ச்சி நடைபெறும்.

நன்கொடைகள் வழங்குவோர் அவ்வக் கிளைச் செயலரிடம் வழங்கவும்.

யாவரும் வருக! வருக!!

C. இராமசுவாமி
பொதுச் செயலர்.

Edited & Published by Sri N. Gurulingam, Pracharagar, Yogasana Alayam, 9-4, Krishnapuram, Kodambakkam, Madras-600094. Printed by Sri C. M. Sivaraman, at T. G. Sambandam & Co., Counian Press, 169, (41) Broadway, Madras-600001. (July-1978)